தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (13.07.2023) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு தயாரிக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு ஆணையரின் இணைய தளத்தினை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார். உடன், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், போக்குவரத்து மற்றும் சாலைபாதுகாப்பு ஆணையர் அ.சண்முக சுந்தரம் மற்றும் தேசிய தகவல் மையத்தின் முதுநிலை இயக்குநர் ஈஸ்வரன் ஆகியோர் உள்ளனர்.

இமாச்சலில் நிலச்சரிவு!

சிம்லா, ஜூலை 15 -

இமாச்சலப்பிரதேசத்தில் தொடர்ந்து பெய்து வரும் கன மழை காரணமாக ஏற்பட்டுள்ள நிலச்சரிவு, வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை யானது 91ஆக அதிகரித்துள்ளது. மலைகள் சூழ்ந்த மாநிலமான இமாச்சலத்தில் பருவமழை காலத்தில் வெள்ளம் ஏற்படுவது இயல்புதான். ஆனால், இம் முறை மழை தீவிரமாக இருந்த தால் பெரு வெள்ளம் ஏற்பட் டுள்ளது.

இந்த வெள்ளம் கண்ணில் படும் அனைத்தையும் அடித்து நொறுக்கி சென்றிருக்கிறது. இத னால் ஒட்டுமொத்தமாக சுமார் ரூ.2,100 கோடிக்கு மேல் இழப்பு ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதில் ஜல் சக்தி துறைக்கு மட்டும் ரூ.1,000 கோடியும், பொதுப்பணித்துறைக்கு ரூ.890 கோடியும் இழப்பு ஏற்பட் டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

சின்னாளப்பட்டியில்

கணவனை இழந்து தவிக்கும் ஆதரவற்ற பெண்களுக்கு நிதியுதவி!

ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி வழங்கினார்!

ஆத்தூர், ஜூலை 15 - சின்னாளபட்டியில் ஆதரவற்ற பெண் மற்றும் கணவனை இழந்து தவிக்கும் பெண்களுக்கு ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி நிதியுதவி வழங்கினார் ஒவ்வொரு கழகத்தொண்டனின் குடும்பத்திற்கும் பாதுகாவலாக இருப்பவர் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் ஒருவரே என அமைச்சர் ஐ. பெரியசாமி பெருமிதமாக கூறினார். பெற்றோரை இழந்து தவிக்கும் இளம் பெண் மற்றும் இளம் விதவை பெண்களுக்கு ஊரக வளர்ச்சி துறை மூலம் அரசு பணி வழங்கப்படும் அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதியளித்தார்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்ற தொகுதி தி.மு.க. உறுப்பினரும், தி.மு.க. மாநில துணைப் பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சருமான ஐ. பெரியசாமி அவர்கள் சின்னாளபட்டி சிறப்பு நிலை பேரூராட்சிக்கு உட்பட்ட அனைத்து வார்களுக்கும் நேரில் சென்று நலத்திட்ட பணிகளை ஆய்வு செய்வதோடு அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்து நிவர்த்தி செய்து வருகிறார். 18வது வார்டு பகுதியில் பொதுமக்களை நேரில் சந்தித்து குறைகளை கேட்டறிந்த ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களிடம் அம்பாத்துரையை சேர்ந்த கௌசல்யா என்ற இளம்பெண் தன் தாய் தந்தையரை இழந்து ஆதரவற்ற நிலையில் இருப்பதாகவும், தனக்கு அரசு பணி மற்றும் அரசு சார்ந்த பணிகள் வழங்க வேண்டும் என மனு கொடுத்தார்.

மனுவை பெற்றுக் கொண்ட ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அப்பெண்ணுக்கு சமூக நல துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை சார்பாக அரசு பணி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

அதன்பின்னர் 3வது வார்டு பகுதியில் வசித்த சின்னாளபட்டி திமுக இளைஞரணி அமைப்பாளர் மறைந்த ஓ.பி.பாக்கியராஜ் அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று அக்குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறிய அமைச்சர் ஐ. பெரியசாமி மறைந்த இளைஞரணி அமைப்பாளர் ஓ.பி. பாக்கியராஜின் மனைவி புனிதாவுக்கு சத்துணவு மற்றும் சமூக நல துறை, ஊரக வளர்ச்சிதுறையில் அரசு பணி வழங்குவேன் என உறுதி அளித்ததோடு நிதியுதவியும் அளித்தார். அப்போது பேசிய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ. பெரியசாமி தமிழகத்தில் வசிக்கும் ஒவ்வொரு திமுக தொண்டனின் பாதுகாவலாக இருப்பவர் கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் ஒருவரே. மூத்த நிர்வாகிகளுக்கு பொற்கிளி வழங்குதல், ஆதரவற்ற, விபத்தால் பாதிக்கப்பட்ட கழகத் தொண்டனின் குடும்பங்களுக்கு நிதியுதவி, போன்றவற்றை வழங்கி கழக தொண்டனின் குடும்பத்திற்கு காவல்தெய்வமாக முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்ளார் என்றார்.

நிகழ்ச்சியின் போது திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர் நடராஜன், ஆத்தூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் முருகேசன், திமுக நிர்வாகி அம்பை ரவி, ஒன்றிய அவைத் தலைவர் சிவக்குமார், பொருளாளர் கருப்பையா, ஒன்றிய துணைச் செயலாளர்கள் எம்.சி;. பாண்டியன், ஆலமரத்துபட்டி ராஜேந்திரன், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், மாவட்ட கவுன்சிலர் பத்மாவதி ராஜகணேஷ், சின்னாளபட்டி பேரூர் கழக முன்னாள் அவைத்தலைவர் ஒ.பால்ராஜ்,

மற்றும் சின்னாளபட்டி பேரூராட்சி மன்ற தலைவர், துணைத்தலைவர், வார்டு உறுப்பினர்கள், திமுக நிர்வாகிகள், இளைஞரணியினர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு ஆளுநரின் பின்புலத்தில் மோடியும் அமித்ஷாவும் உள்ளனர்!

விலைவாசி உயர்வுக்கு ஒன்றிய பா.ஜ.க. அரசே காரணம்!

மார்க்சிஸ்ட் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன் பேட்டி!

திண்டுக்கல், ஜூலை 15-

மோடி அரசு அமலாக்கும் பொருளாதார கொள்கைகளின் விளைவாக தக்காளி உள்ளிட்ட காய்கறிகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலை கடுமையாக அதிகரித்துள்ளது என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன் சாடினார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக திண்டுக்கல்லில் மாநிலச் செயலாளர் கே.கே.பாலகிருஷ் ணன் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:-

விலைவாசி கடும் உயர்வு!

ஒன்றிய அரசு கடைப்பிடிக்கும் பொருளாதாரக் கொள்கைகளால் விலைவாசி கடுமையாக உயர்கிறது. சாதாரண மக்கள் கடுமையாக பாதிக்கப்படு கிறார்கள். ஒன்றிய அரசு இதைப் பற்றி கவலைப்படவில்லை. தமிழ் நாட்டில் தக்காளி சாகுபடி உற்பத்தி பரப்பளவு குறைந்தது. உற்பத்தியும் குறைந்தது. இதனால் தற்போது தக்காளி விலை கிட்டத்தட்ட 300 விழுக்காடு உயர்ந்து விற்கப்படுகிறது. விலை குறைவது, விலை ஏறுவதை கட்டுப்படுத்துவதற்கு அரசு தலையிட்டு கொள்முதல் செய்து விநியோகம் செய்ய வேண்டும். விவசாயிகளுக்கு நியாய விலை கிடைக்க வேண்டும். வாடிக்கையாளர்களுக்கும் நியாயமான விலையில் கிடைக்க வேண்டும். அதற்காக அரசு தக்காளியை கொள்முதல் செய்ய வேண்டும். உற்பத்தியை பெருக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மாநில அரசே பருத்தியை கொள்முதல் செய்க!

பருத்தி அறுவடை தமிழ் நாடு முழுவதும் நடைபெறுகிறது. பருத்தி குவிண்டாலுக்கு ரூ.7 ஆயிரம் என்று ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. இது போதுமான விலை இல்லை. ஒன்றிய அரசு விலையை அறிவிக்கிறது, ஆனால் கொள்முதல் செய்ய வில்லை. தனியார் வியாபாரிகள் குறைந்த விலைக்குத்தான் வாங்குவார்கள். இது தொடர்பாக முதலமைச்சர் ஒன்றிய அரசுக்கு கடிதம் எழுதியுள்ளார். மாநில அரசே பருத்தியை கொள்முதல் செய்ய வேண்டும்.

அதானி தில்லுமுல்லு மோடி ஆதரவு!

மகாராஷ்டிராவில் தான் அதிகளவில் பருத்தி சாகுபடி நடைபெறுகிறது. ஆனால் தமிழ்நாட்டில் தான் அதிகமான நூற்பாலைகள் உள்ளன. எனவே மாநில அரசே பருத்தியை கொள்முதல் செய்து அந்த நூற்பாலைகளுக்கு கொடுக்கலாம். இந்நிலையில் தனியார் வியாபாரிகள் பருத்தி விலையை கடுமையாக உயர்த்தி விற்கிறார்கள். எங்களால் பருத்தியை வாங்கி நூல் நூற்க முடிய வில்லை என்று 600க்கும் மேற்பட்ட சிறு தொழிலதிபர்கள் வேலைநிறுத்தம் செய்கிறார்கள். இந்த தில்லுமுல்லு செய்வது முழுவதும் அதானிஅம்பானி போன்றவர்கள் நடத்தும் நிறுவனங்கள் தான். மோடி இதற்கு மறைமுகமாக ஆதரவு தெரிவிக்கிறார்.

அரிசி கொடுக்க மறுப்பதா?

ஒன்றிய பா.ஜ.க. அரசு மாநில அரசுகளுக்கு அரிசி கொடுக்க மாட்டேன் என்கிறது. உங்களுக்கு அரிசி தேவையென்றால் வெளி மார்க்கெட்டில் போய் வாங்கிக் கொள்ளுங்கள் என்கிறது ஒன்றிய அரசு. ஓபன் மார்க்கெட் செல்லிங் ஸ்கீம் என்று சொல்லக்கூடிய ஓ.எம்.எஸ். எஸ்.தனியார் வியாபாரிகளுக்கு டெண்டர் விடுகிறார்கள். அவர்களுக்கு ஒன்றிய அரசு ஒரு கிலோ அரிசி ரூ.31க்கு கொடுக்கிறது. அவர்கள் நமக்கு ரூ.50க்கு விற்பார்கள். அதனால் விலை இல்லா அரிசியை மாநில அரசுகளால் கொடுக்க முடிய வில்லை. நெல், கோதுமையை முறைப்படி மாநில அரசுகளுக்கு ஒன்றிய அரசு கொடுக்க வேண்டும். மாநில அரசுகளுக்கு அரிசி கொடுக்க மாட்டோம் என்று சொல்வது பெரும் துரோகமாகும்.

அமித்ஷா மோடி பின்புலத்தில் ஆளுநர்

ஆளுநரை எதிர்த்து விரிவான கடிதத்தை முதலமைச்சர் குடியரசுத் தலைவருக்கு எழுதியிருக்கிறார். அது நாடு முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தி இருக்கிறது. அவரது எல்லா வகையான நடவடிக்கைகளுக்கு பிரதமர் மோடியும், ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் பின்புல மாக இருக்கிறார்கள் என்பது தெரியவருகிறது.

மாடு மேய்க்க அனுப்புவது ஆர்.எஸ்.எஸ்.

பழனி பகுதியில் சிப்காட் அமைந்தால் ஆயிரம் பேருக்கு வேலை கிடைக்கும். கோசாலை அமைத்தால் எத்தனை பேருக்கு வேலை கிடைக்கும்?. 'மாடு மேய்க்கத்தான் நீ லாயக்கு' என்று சொல்வது தான் ஆர்.எஸ்.எஸ் கொள்கை. சாதாரண தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் சிப்காட் போன்ற நிறுவனத்திற்கு நல்ல வேலைக்கு போகக் கூடாது; இப்படியே ஆடு மாடு மேய்க்க வேண்டும் என்பதற்காகத்தான் கோசாலை அமைக்க வேண்டும் என்கிறார் பா.ஜ.க.வின் எச்.ராஜா.

கோவில்களில் பா.ஜ.க. அரசியல் வன்முறை

பழனி மலையில் கடந்த 2 ஆண்டுகளாக முருகன் கோவிலை மையப்படுத்தி பா.ஜ.க.வினர் அரசியல் செய்து தொடர்ந்து வன்முறையில் ஈடுபட்டு வருகிறார்கள். பழனி முருகன் ஆலயத்திற்கு இந்து மதத்தினரைத் தவிர யாரும் வரக்கூடாது என்கிறார்கள். விஞ்ச்சில் ஏறக்கூடாது என்று தகராறு செய்கிறார்கள். பழனியை போல சிதம்பரம் நடராஜர் கோவிலையும் கலவர பூமியாக மாற்றுகிறார்கள். அமைதியாக சாமி கும்பிடலாம் என்று வந்தால் அங்கும் அடிதடி தகராறு. பழனி, சிதம்பரத்தை வன்முறைக்களமாக மாற்றுவதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை முதல்வர் திறந்து வைக்கிறார்!

தேனி வடக்கு மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

மாவட்டக் கழகச் செயலாளர் தங்க தமிழ்செல்வன் அறிவிப்பு!

தேனி, ஜூலை 15-

தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்செல்வன் விடுத்துள்ள அறக்கை வருமாறு:-

நூற்றாண்டு நாயகர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பன்முக ஆற்றலையும், அவர் படைத்தளித்த மக்கள் நலத் திட்டங்களையும், தமிழ்நாட்டின் வருங்கால தலைமுறையினர் அவரை என்றென்றும் நினைவில் கொள்ளும் வகையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம் இன்று (15.07.2023 - சனிக்கிழமை) மாலை 05.00 மணியளவில் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களால் திறந்து வைக்கப்படுகிறது..

இவ்விழாவில் எழுச்சியோடும், உணர்ச்சியோடும் தேனி வடக்கு மாவட்டத்தில் இருந்து மாநில நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், கிளைகழக, வார்டு கழகச் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு தேனி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தங்க தமிழ்செல்வன் கேட்டுக் கொண்டுள்ளார்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் காவேரிப்பட்டினத்தில் மாநில அமைப்பு சாரா ஓட்டுநர் சார்பில் நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவில் அமைச்சர் அர.சக்கரபாணி, மாநில அமைப்பு சாரா ஓட்டுனர் அணித் தலைவர் கதிர் ஆனந்த் எம்.பி. ஆகியோர் பங்கேற்று 7000 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரை ஆற்றினார்கள். உடன் மாவட்டச் செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ, மாநில அமைப்பு சாரா ஓட்டுனர் அணிச் செயலாளர் டி.செங்குட்டுவன், சொத்து பாதுகாப்புக் குழு உறுப்பினர் இ.ஜி. சுகவனம், வி.சி. கோவிந்தசாமி, தேங்காய். சுப்பிரமணி, செந்தில்குமார், கே.வி.எஸ்.சீனிவாசன், ஆனந்தன், ஆறுமுகம், நாகராஜ் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

உலகைப் படித்த மேதை!

கொம்புத்தேன் பேச்சல்ல! எளிய பாணி!
கோமளப்பூஞ் சிவப்பல்ல! கருப்பு மேனி!
தும்பைப்பூக் கதராடை! முழங்கா லைப்போய்த்
தொடுகின்ற மழைக்கைகள்! படர்ந்த நெற்றி!
தெம்புக்குத் தெம்பூட்டும் நிமிர்ந்த திண்டோள்!
தேசத்தை நினைந்துருகும் வெளிச்சக் கண்கள்!
கம்பீரத் திருத்தோற்றம்! ஏழை நேசர்!
காலத்தின் அருட்கொடைநம் காம ராசர்!

அருள்மிகுந்தார் இவர்தந்தை குமார சாமி!
அன்புத்தாய் சிவகாமி! இவர்கள் பெற்றுத்
தர, மகிழ்ந்து சிலிர்த்ததுநம் அன்னை பூமி!
தலைவர்களே விருதுகளைப் பெறுவார்! ஆனால்
விருதுநகர் நம்" காம ராச ரையே"
விருதாகப் பெற்றநக ரன்றோ! இந்தப்
பெருமை,புகழ் குலுக்கலிலே கிடைத்த ஒன்றோ?
பேருழைப்புத் தியாகத்தின் பரிசே யன்றோ!

பனையேறும் குடும்பத்தில் பிறந்தார்! ஆனால்
பலர்ஏறி, மேல்உயர ஏணி யானார்!
மனைமக்கள் இவர்வாழ்வில் இல்லை! நாட்டு
மக்களையே கரைசேர்க்கும் தோணி யானார்!
சுனைநீராய் பயன்பட்டுத் தொண்டு செய்தார்!
சுதந்திர நெருப்பில் நெய் யானார்! எள்ளின்
முனையளவும் சுயநலம்பார்த் தாரா? கண்கள்
மூடும்வரை பிறருக்கே வாழ்ந்து போனார்!

படிக்காத மேதை!இவர் போல்உ ணர்ந்து
படித்தவர்கள் யாருமில்லை உலகை! மோகம்
பிடிக்காத வர்!இவர்போல் தேச பக்தி
பிடித்தவர்கள் யாருமில்லை! செல்வம் சேர்க்கத்
துடிக்காத வர்!இவர்போல் விடுத லைக்குத்
துடித்தவர்கள் யாருமில்லை! தேநீர் கூட
குடிக்காத மனிதர்!இவர் போல்க ரைத்துக்
குடித்தவர்கள் அரசியலை, எவரும் இல்லை!

விளைத்தெங்கும் இவர்சொத்து சேர்க்க வில்லை!
வெளிநாட்டில் பணம்போட்டுக் குவிக்க வில்லை!
வளைத்தெங்கும் மாளிகைகள் கட்ட வில்லை
வாடகைக்கே குடியிருந்தார் வாழ்நா ளெல்லாம்!
இளைத்துப்போ னார்!இதயம் வெடித்துப் போனார்
இந்தியா "நெருக்கடியால்" இருண்ட நேரம்
களைத்துப்போ னார்! ஆமாம், "கலைஞர்" கைமேல்
கைவைத்துத் "தாய்நாட்டைக் காப்பாற்" றென்றார்!

பூவைத்து மலர்வளையம் வைத்துக் கண்ணீர்
பொழிந்துவிட்டுச் சிலர்சென்றார்! புகழு டம்பில்
மூவர்ணக் கொடிபோட்டுப் போர்த்தி விட்டு
முடிந்ததுநம் கடமையெனச் சிலபேர் சென்றார்!
தாய்வைத்த இதயத்தைக் கொண்டி ருந்த
தலைவர்நம் கலைஞர்தாம், உண்மை யான
நேயத்தில், கிண்டியிலே காம ராசர்
நினைவிடத்தை உருவாக்கிப் பெருமை சேர்த்தார்!

வரும்தலைவர் போம்தலைவர் நாட்டில் உண்டு!
வாழ்ந்தசுவ டில்லாத தலைவர் உண்டு!
தரும்தலைவர் பெறும்தலைவர் அதிகம் உண்டு!
தலைவர்களில் இந்நாடு வணங்கிப் போற்றும்
"பெருந்தலைவர்" உயர்காம ராசர் அன்றோ!
திரிந்தலைவர் சிலர்தலைவர் ஆவ தற்கே!
தெப்பமெல்லாம் கப்பலென்றால் ஒப்பு வோமா?

ஏழ்மைநிறை குடும்பத்தின் பிள்ளை யாகி
இளம்வயதில் தந்தையினை இழந்து வாடி
ஊழ்வினைஎன் றிருக்காமல், ஓய்வில் லாமல்
உழைத்துயர்ந்து தமிழ்நாட்டின் முதல்வர் ஆகித்
தாழ்வகற்றும் விடுதலைப்போர்க் "கர்ம வீரர்"
தலைவர்களை உருவாக்கும் தலைவர் ஆகி
வாழ்வைஇந்த நாட்டுக்கே அர்ப்ப ணித்து
வருங்காலத் தலைமுறைக்கும் பாடம் ஆனார்!

சொல்லுக்குள் தேமதுரச் சுவையைக் கூட்டிச்
சொக்கவைக்கும் மாமதுரைக் கூடல் மண்ணில்
"கல்விக்கண் திறந்தமகன்" பிறந்த நாளில்
"கலைஞரின் நூற்றாண்டு நூல கத்தை"
வல்லார்நம் "தளபதியார்" திறந்து வைத்து
வரலாற்றில் ஒளிபடைத்தார் இருவ ருக்கும்!
இல்லார்க்கே வாழ்ந்தமகன் காம ராசர்
எப்போதும் வாழ்வார்நம் இதயத் துக்குள்!

கவிச்சுடர்
கவிதைப்பித்தன்